# மக்கள் மறுவாழ்வு

மக்கள்மறுவாழ்வு

**சந்தா விபரம்**

தனிப்பிரதி 75 காசுகள்
ஆண்டு சந்தா ரூ. 10 00

விபரங்களுக்கு
மக்கள் மறுவாழ்வு
சென்னை-600094

மலர்: 4 ஆடி-ஜூலை 1986 விலை 75 காசுகள் இதழ்: 10


# கொத்தடிமையிலிருந்து மீண்டவர் கொடிய வறுமைக்கு ஆளாயினார்!

**முதுகுவலி போய் திருகுவலி வந்தது போல கொடைகானலில் கொத்தடிமை வாழ்விலிருந்து மீண்ட தாயகம் திரும்பிய தொழிலாளர்கள் கொடும் வறுமைக்கு ஆளாகிவிட்ட பரிதாப நிலை ஏற்பட்டுள்ளது**

தாயகம் திரும்பியோர் பலர் கொடைகானல் மலையில் வாட்டில் மரங்களிலிருந்து பட்டைகளை உரிக்கும் தொழிலில் ஈடு பட்டிருந்தார்கள். டான் இந்தியா மற்றும் பல கம்பெனிகளிடம் வாட்டில் மரங்களில் பட்டை உரிக்கும் உரிமங்களை தமிழக அரசிடம் பெற்றிருந்த காண்டிராக்டர்கள் கீழ் இவர்கள் இந்த பணியினை செய்து வந்தனர்.

அக் காண்டிராக்டர்களிடம் இவர்கள் கொத்தடிமையாக வைக்கப்பட்டு சொல்ல முடியாத துன்பங்களை அனுபவித்து வந்தார்கள்

கொடைகானலில் துணை கலெக்டராக பதவி வகித்து வந்த பிர்ஜடா, தாயகம் திரும்பியோர்களான அத்தொழிலாளருக்கு சேர வேண்டிய பாக்கியை வசூலித்துக் கொடுத்து விடுதலையும் செய்தார் (இவர் எடுத்த நடவடிக்கையின் பலனாக இவர் இடமாற்றம் செய்யப்பட்டதும், தற்போது இந்த பிரச்சனை முடியும்வரை வேறு இடத்திற்கு மாற்றக் கூடாது என சுப்ரீம் கோர்ட் ஆணை பிறப்பித்திருப்பதும் குறிப்பிடத் தக்கது)

காண்டிராக்டர்கள் தாயகம் திரும்பியத் தொழிலாளர்களை கொடுமைப் படுத்துவதாகவும் அவர்கள் பிடியிலிருந்து இத் தொழிலாளர்களை விடுவிக்க வேண்டுமென்றும் கோரி பந்துவா முக்தி மார்ச்சா என்ற சமூக சேவா நிறுவனம் சுப்ரீம் கோர்ட்டில் மனு தாக்கல் ஒன்றை செய்ததை யொட்டி ஒரு கமிஷனும் நியமிக்கப்பட்டிருக்கிறது

இதன் எதிரொலி, கொடைகானலில், பேரீஜம், இருபத்திரெண்டு, ரெட்ட போஸ்ட் ஆகிய கூப்புகளில் மரம் வெட்டும், பட்டை உரிக்கும் தொழிலாளர்கள் வாழ்வு கேள்விக் குறியாகி விட்டது- இவர்களது கொத்தடிமை வாழ்வு வெளிச்சத்திற்கு வந்தவுடன் இவர்கள் வேலையற்ற தொழிலாளர்களாக மாறிவிட்டார்கள்.

கொத்தடிமை வாழ்விலே, வேலை செய்துக்கொண்டே வாழ்ந்த போது பிரச்சனைத் தீராதவர்களாக இருந்தவர்கள் வேலை இழந்த நிலையில் எப்படி இருப்பார்கள்?

கொடிய பசிக்கும் வறுமைக்கும் ஆளாகி இருக்கிறார்கள். சில சமூக சேவா நிறுவனங்களுக்கும் சில தனிப்பட்டவர்களும் மனிதாபத்துடன் உதவ முன் வந்தாலும் எதிர்ப்புகளுக்கும், தடைகளுக்கும் உட்படுத்தப்படுகிறார்கள்.

கடந்த 8.6.86 அன்று ஒரு பரிதாப சம்பவம் நடைபெற்றது. வேலையற்று, பசிக்கொடுமைகளுக்குவாடும் அவர்களுக்காக உணவு பொருட்கள் கொண்டு வர சென்றவர்களில் ஒருவர்- பழனிவேல் என்பவர், குங்கிலிய மரக்கட்டைகள் ஏறி வந்த லாரியில் ஏறிவந்த போது லாரி குடை சாய்ந்து அடிப்பட்டு மாண்டார்.

இவருக்கு இரண்டு குழந்தைகள்; வறுமையில் காப்பாற்ற முடியாமல் அதற்கு ஒரு மாதத்திற்கு முன் தான் ஒரு குழந்தை இறந்தது. மரக்கட்டையுடன் இரத்தவெள்ளத்தில் இறந்துக்கிடந்த காட்சி எல்லோரையும் கலங்கச் செய்தது உணவு தேடிவந்த மனிதருக்கு நேர்ந்த இந்த பரிதாப சாவு சுமார் 250 குடும்பங்களை கண்ணீர் வெள்ளத்திற்குள்ளாக்கியது.

கொத்தடிமைக்கும், கொடிய வறுமைக்குள்ளாகி வாழும் தாயகம் திரும்பியோர் பிரச்சனைக்கு பொறுப்பு யார்?

இலங்கையில் நாடற்ற மக்களாக இருந்தாலும், தேயிலை, ரப்பர் தோட்டங்களில் வாழ்க்கையை ஓட்டினார்கள். அன்றாட வாழ்க்கை பிரச்சனையின்றி கொஞ்சம் நிம்மதியாக வாழ்ந்தார்கள். குடியுரிமைப் பெற்று வந்த இங்கோ இவர்கள் வாழ்வு கேள்விக்குறியாகி விட்டது. நாடோடிகளாகி நலிந்து மடியும் இவர்கள் வாழ்வுக்கு விடிவு எப்போது? O

# விவசாயிகள் சங்கம் கண்டனம்!

சப்-கலெக்டருக்கு கொடுக்கப்பட்டுள்ள இடமாற்றம் கொடைக்கானல் மக்களுக்கு கொடுக்கப்படும் தண்டனையாகும், எனவே சங்க உறுப்பினர்களே, கொடை வாழ் பொதுமக்களே, நலம் விரும்பிகளே இக்கொடுமைக்கு எதிராக குரல்கொடுக்க, நடவடிக்கை எடுக்க உங்களை அன்புடன் அழைக்கிறோம்.
—இவ்வாறு சிறுவிவசாயிகள் விவசாயத் தொழிலாளர் சங்க செயலாளர் திரு. ஆர். ராஜ்

(7 ம் பக்கம் பார்க்க)

# மக்கள் மறுவாழ்வு

மலர் : 4 ஆடி 1986 இதழ் : 10


# ஜயவர்த்தனாவின் புதிய பிரேரணை: புதிய மொந்தையில் பழைய கள்!

இலங்கைத் தமிழர் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கு ஜயவர்தனா தந்துள்ள புதிய பிரேரணையில் சாதகமான அம்சத்தையும் பார்க்கக் கூடியதாக இல்லை- இது புதிய மொந்தையில் பழைய கள்ளை தருகின்ற செயல் தான்.

இந்த புதிய பிரேரணையிலும் 'மாகாண கவுன்சில்'- 'மத்திய அரசு' என்பது போன்ற அமைப்புகள் குறித்து பேசப் பட்டாலும் தமிழ் மக்களுக்கு உரிய உரிமைகளை வழங்க முயல்வதாக இல்லை-தமிழ் மக்களின்- போராட்டும் மக்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்கும் வகையில், சிறுபான்மையாக இருக்கின்ற ஒரு தேசிய இனத்தின் சுய உரிமைகள்-நலங்கள் குறித்து அக்கறை காட்டுவதாக இல்லை.

கடந்த காலத்தில் எந்த அளவிற்கு பெரும்பான்மை இனத்தின் அதிகார-ஆளுகைக்குள் அடக்கி வைத்திருந்தோ அதே அதிகார-ஆளுகை மனப்பான்மையையும் போக்கையும் தான் இந்த புதிய பிரேரணை பறைசாற்றுகிறது.

இன்றைய அரசியல் சாசனத்தின் வரம்பிற்குப்பட்டே இயங்கப் போகும் மாகாண கவுன்சில்கள் மத்திய அரசின் அதிகாரத்திற்கு கட்டுப்பட்டதாகவே இருக்கப்போகிறது பல்வேறுபட்ட மொழிவாரி மாநிலங்களின் பிரதிநிதிகளை கொண்ட இந்தியாவின் மத்திய அரசு போலல்ல இலங்கையில். அங்கே மிகப் பெரும்பான்மையைக் கொண்ட சிங்களப் பிரதிநிதிகளும், மிகச் சிறுபான்மையைக் கொண்டதமிழ் பிரதிநிதிகளும்தான் அந்த அரசில் இருப்பார்கள் இங்கே எந்தளவிற்கு தமிழ் மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்,? நலன்கள் பேணப்படும்? அதே பழைய நிலைமைதான் நீடிக்கும் என்பது உறுதி.

திருகோணமலை துறைமுகப்பகுதி எந்த மாகாண கவுன்சிலுக்கும் உட்படாது. மத்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகவே இருக்கும் என தெரிவிக்கிறது.

நில குடியேற்றம் என்ற தேசிய கொள்கை தமிழ்பிரதேசத்தில் படிப்படியாக சிங்கள மக்களை குடியேற்றம் செய்வது மட்டுமல்லாது, (விகிதாசார) ஒதுக்கீடுகளும் நடைபெறும் பட்சத்தில் தமிழ் பிரதேசம் கொஞ்சம் கொஞ்சமாக தனது பாரம்பரியம் இழக்கும் நிலை ஏற்படும். குடியேற்றம் - ஒதுக்கீடுகளைத் தொடர்ந்து நிகழக் கூடிய விகிதாசார தேர்தல் முறையும் தமிழ் மக்களை அரசியல் அனாதைகளாக்கிவிடும்.

மாகாண கவுன்சில்களுக்கு அதிக சுய அதிகாரங்கள் அளிக்கப்படும் என்று புதிய பிரேரணை சொல்கிறது. ஆனால் அக்கவுன்சில்களுக்கு என்ன மாதிரியான அதிகாரங்கள் அளிக்கப்படவிருக்கிறது என்பது குறித்து நோக்கும் போது அது திருப்தி அளிப்பதாக இல்லை. அரசியல் சாசனத்திற்கு உட்பட்டதும், ஜனாதிபதி நினைத்தால் கலைக்கக் கூடியதுமான இந்த கவுன்சில்கள் பெயரளவிலானவை தான்.

இந்த பிரேரனை தமிழ்மக்கள் கோரிக்கையை நிறைவேற்றுவதாகவோ குறைந்த பட்ட சுய உரிமைகளை யாவது தருவதாகவோ இல்லை.

தமிழ்மக்களின் எண்ணத்திற்கு-உரிமைக்கு உரிய இடம் அளிக்கப்படாத இந்த பிரேரணை இலங்கைத் தமிழர்களின் பிரச்சனைக்கு தீர்வு அளிக்குமா என்பது கேள்விக்குறி ஆயினும் பேச்சுவார்த்தைத் தொடர்வதற்கு இது வழியாக இருக்கிறது.

இந்த பேச்சுவார்த்தையில் புதிய பிரேரணை குறித்து அலசி ஆராய வேண்டும்-சரியான தீர்வுக்கு வழி பிறக்க வேண்டும்.

விரைவில் இலங்கை இனப்பிரச்சனையை ஒரு முடிவுக்கு கொண்டு வர வேண்டும்-இலங்கை இராணுவத்தின் கொடுமைக்கு முடிவுகட்ட முயல வேண்டும்.

இராணுவத்தின் கொடுமையில் அப்பாவித்தமிழ் மக்கள் துன்பத்திற்கும், துயரத்திற்கும் உள்ளாகி இருக்கிறார்கள்.

ஜே. ஆர். அரசு ஒரு புறத்தில் தீவிரமான இராணுவ நடவடிக்கை மூலம் அப்பாவி மக்களை அழித்தொழித்து வருகிறது.

வெளிநாடுகளிலிருந்து இராணுவ தளவாடங்களைப் பெற்று, பயிற்சி அளித்து, தனது இராணுவ பலத்தை பன்மடங்காகப் பெருக்கியுள்ளது- விமானங்கள் மூலம் தமிழ் மக்கள் மீது குண்டுகளை வீசிகொல்லும் கொலைப் பாதக செயலுக்கு தன்னை உயர்த்திக் கொண்டிருக்கிறது.

எனவே இலங்கைஅரசின் மனப்போக்கை-மனதில் கொண்டும் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும்- தமிழர் கோரிக்கையை வென்றெடுக்க முயல வேண்டும்.

இந்தவேலையில் வன்முறை செயல்களைத் தவிர்க்க வேண்டும் வன்முறை செயல்களை தமிழ் போராளிகள் தவிர்த்து நிதானத்துடன் நடப்பதன் மூலம், தமது லட்சியத்தில் தாம் தெளிவாக இருப்பதை உணர்த்தவும்- இந்திய அரசின் நல்லெண்ணத்தை பெறவும் உதவும். ○

# புள்ளி விபரம் மட்டுமே அரசின் சாதனை! ஆனால் நடைமுறையில் பலருக்கு மறுவாழ்வு கிடைக்கவில்லை!

**''புள்ளி விவரம் மட்டுமே அரசின் சாதனை. நடைமுறையில் மாறுபட்டே இருக்கிறது''என்று குமுறுகிறார் கொடைகானலில் வாழும் தாயகம் திரும்பியவரும், சமூக சேவையாளருமான திரு. எம் விபூசனன் அவர்கள். அவர் குமுறி எழுதியுள்ள கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம் -ஆசிரியர்.**

ஜூன் 'மக்கள் மறுவாழ்வு', மே இதழில் வெளிப்பட்ட கம் பீரத்தை சற்று சரித்து விட்டது போல தோன்றுகிறது. 'பால் மரக் காட்டினிலே' போன்ற நேர்முக வர்ணனை கட்டுரை கள், இதர மாநிலத்தில் தாய கம் திரும்பியவர்கள் படும் சுக துக்கங்களை, அல்லது அவர்க ளின் அனுபவங்களை புரிந்து கொள்ள உதவுகிறது.

ஜூன் இதழில் 400 தாயகம் திரும்பியோர் குழந்தைகளுக்கு இலவசக் கல்வி வசதி என்ற கட்டுரையில், 8வது பாராவில் தாயகம் திரும்பியோர் மத்தி யில் எத்தனையோ சங்கங்கள், அமைப்புகள், சேவைகள் ஆற்றி வத்தாலும் தாயகம் திரும்பியோர் குழந்தைகளின் கல்வி விசயத்தில் எதுவும் செய்ததில்லை, என்று குறிப் பிட்டிருப்பது வேதனைக்குரிய தும், அதே நேரத்தில் ஆய்வற் றதுமாகும். ஆய்வு செய்யாத வன் பேசுவதற்கு அறுகதை அற்றவன் என்பது கற்றோர் முடிவு. எமது அமைப்பு'சிராக்' இதுவரைக்கும் நூற்றுக்கு மேற் பட்ட குழந்தைகளை - காந்தி கிராமம், பாய்ஸ்டவுன், மாத் தூர் போன்ற பாடசாலைகளி லும் வேறு சில பாடசாலைகளி லும் மாணவர்களை சேர்த்து விட்டுள்ளது. அத்துடன் தங் கும் வசதிகள் பெற்றுக்கொடுக் கப்பட்டுள்ளது. இஃது ஒன்றும் பெருமைப்படக்கூடிய ஒன் றல்ல; ஏனெனில் இவை சமூக சேவையில் துளி போன்றது என்றே நாங்கள் கருதுகிறோம். இது தவிர பல இடங்களில் மாலை பாடசாலைகள் இலவச மாக நடத்தப்பட்டு வந்துள் ளன. இவ்வாறு பல அமைப்பு கள், தனிநபர்கள் இதில் ஈடு பட்டு வந்துள்ளனர். அவர்கள் எல்லோரையும் புண் படுத்துவ தாக அமைந்துள்ள இவ்வித தவறுகளை தவிர்க்க வேண்டு கிறோம்.

## கொத்தடிமை: வறுமைக்கோடு

இந்திய அரசின் 'மறு வாழ்வு உதவிகள்' என்ற மறு பிரசுர கட்டுரை புள்ளி விபரங் களால் நிறைந்து போய் உள் ளது. அரசு என்றுமே புள்ளி விவரங்களை சேகரித்து அதிலி ருந்து தமது சாதனைகளை பறைசாற்றிக்கொள்கிறது. ஆயி னும் நடைமுறை என்பது மாறு பட்டே உள்ளது இலங்கையி லிருந்து தாயகம் திரும்பியோர் கள் மத்தியில் ஆய்வு செய்துள் ள 'எங்கெங்கும் அந்நியமாகக் கப்பட்டவர்கள்' என்ற புத்த கம் இந்த நடைமுறையை வெ ளிச்சத்திற்கு கொண்டு வந் துள்ளது.

நாங்கள் வாழ்கின்ற கொடைக்கானல் பகுதியை எடுத்துக் கொண்டால், 'கூக் கால் மறுவாழ்வு திட்டம், 180 குடும்பங்களை வறுமைக் கோட்டுக்கு கீழே 'புதைத்து' விட்டது. இன்னும் காடுகளில் (கூப்பு) கொத்தடிமைகளாக 499 பேர்கள் உள்ளனர். 44 பேர் பற்றிதான் கொத்தடிமை என்று பத்திரிகைகள் பறை சாற்றுகின்றன. இங்கே உண் மைகள் யூக்கலிப்ட்ஸ் மரங் களாக உயர்ந்து நிற்பதைக் காணலாம்.

வீட்டு லோனுக்கு 3 செண்ட் நிலம் காட்டு, கடன் கொடுக் கிறோம் என்று கூறுகின்றார். நிலம் காட்ட அவர்களுக்கு வழி இல்லை.

## குட்டிச் சுவர்களாக பல வீடுகள்

எமது அமைப்பு சில தாயகம் திரும்பிய குடும்பங்களுக்கு வீடு கட்ட 3 செண்ட் நிலம் வழங்கி யும், இன்னும் பலருக்கு வீடு கட்டுவதற்கான 'லோன்' கிடைக்கவில்லை. வருடக் கணக்கில் 'இழுபறி'யாக உள் ளது. இவற்றையெல்லாம் கவ னத்தில் எடுத்துக் கொள்ள வேண்டும். மேட்டுப்பட்டி, திருவரங்குளம், பள்ளத்து வயல் போன்ற புதுக்கோட்டை பகுதிக்கு போய் பாருங்கள். கட்டப்பட்டதாக கூறப்பட்ட வீடுகள் 5000 கிடைக்கும். அவை வீடுகள் அல்ல குட்டிச் சுவர்கள். இதை கட் டப்பட்ட வீடுகள் 5000 ஆக உள்ளது என்று யாரும் புள்ளி விவரத்திற்குள் கொண்டுவந்து பெருமை அடிக்கலாம். ஆனால் வாழ்க்கை 'குட்டிச் சுவராகி' போனவர்களுக்குத் தெரியும் உண்மை புள்ளி விவ ரங்கள்.

## அதிகாரிகளின் அக்கறையின்மை

தாயகம் திரும்பியோர்- அக திகளுக்கு மறுவாழ்வு-துயர் துடைப்பு உதவிகள்' இதுவும் உண்மைகளை புள்ளி விவரங் களூடாகவே காண்கிறது ஆனால் புள்ளி விவரங்களுக்கு அப்பால் அரசின் 'பெரும் புள் ளிகள்' தங்களின் ஊழல்களை மறைத்துக் கொள்கின்றனர். கரடிக்குளம், பருத்திப்பாடு காலனி, காந்திநகர் காலனி மக்கள், அரசு வழங்குவதாக கூறிய 6,850/- ரூபாயை பெற லஞ்சம் கொடுத்தும், இழு பறிபட்டதையும்

கொடைக்கானலுக்கு, விவ சாயத்திற்கு நிலம் கேட்டு எழுதிவந்த 20 குடும்பங்கள் ஐந்து வருடங்களுக்கு மேலாக நிலம் தேடி அலைந்து திரிந்த வர். அரசு அதிகாரிகள், இந்த விவசாய நிலம் தேடி அலை யும் தாயகம் திரும்பிய நாடோ டிகளை பார்த்து கூறுவதா வது ''நீங்கள் நிலம் தேடிக் கண்டு பிடியுங்கள் நாங்கள் அவற்றை தங்களுக்கு வழங்கு கிறோம்''. என்னே! அரசு அதிகாரிகளின் அக்கறை. கொடைக்கானலில் இவர்கள் இறுதியில் கூப்புகளில் தஞ்சம் புகுந்து கொத்தடிமைகளாக மாறிவிட்டனர். ஆகவே, அவர்களை நீங்கள் அணுகி கேட்டால் இந்த மறுவாழ்வு துயர் துடைப்பு திட்டத்தை பற்றி இப்படிக் கூறுவர் ''விவ சாய நிலத்திட்டம் என்பது, தாயகம் திரும்பியோர்களை நாடோடிகளாக்கும் திட்டம், இறுதி முடிவில் கொத்தடிமை களாக்கும் திட்டம் என்று.

அரசு வழங்கும் மறுவாழ்வு உதவிபெற தீக்குளித்த தற் கொலை செய்துக் கெண்ட சம் பவங்கள் பலவும் உண்டு. ○

## அரிமா சங்க உதவி

தாயகம் திரும்பிய பெண்கள் தையக்கலை பயில தையல் மெஷின் ஒன்றை இலவசமாக சென்னைபேசின் பிரிஜ் வட்ட அரிமா சங்கம் (கோத்தகிரி) மக்கள் மறுவாழ்வு மன்றத் திற்கு அளித்துள்ளது.

மேற்படி அரிமா சங்க ஆண்டு விழா 22.6.86யில் சென்னை ஹோட்டல் அம்பா சடர் பல்லவாவில் நடந்த போது வழங்கப் பட்டது. அரிமா சங்கத் தலைவர் அரி மா போல் பீட்டர் அவர்கள் முயற்சியில் வழங்கப்பட்ட இந்த தையல் யந்திரத்தை விழாவில் முக்கிய விருந்தின ராககலந்துக்கொண்ட டாக்டர் ரவீந்திரநாத் அவர்களின் துணைவியார் சுலோசனா ரவீந்திரநாத் வழங்கினர்(கோத் தகிரி) மக்கள் மறுவாழ்வு மன்ற சார்பில் வீமா ரோஸ்மேரி பெற் றுக் கொண்டார். ○

# அபாய அறிகுறிகள்

நம் உள்ளங்களையும், உணர்வுகளையும் ஓயாது உறுத்திக் கொண்டிருப்பது ஈழத்தமிழர் போராட்டமாகும். இலங்கை வாழ் தமிழ் மக்கள் படும் தொல்லைகளையும், துயரங்களையும், அல்லல்களையும் அனர்த்தங்களையும் உள்ளத்தால் உணரும் பொழுது நாம் அனலிடைப்பட்ட மெழுகு போல் உருகிப்போகிறோம். உணர்வுகள் வெந்து போகின்றன.

மூன்றாண்டுகளாக அழுத கண்ணும், வெந்த உள்ளமுமாகவே பல லட்சக்கணக்கான தமிழ் மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இலங்கைவாழ் தமிழ் மக்கள் திசையற்ற கப்பல் போல் கரை தெரியாமல் கலங்கி நிற்கிற நிலைதான் காணமுடிகிறது.

இலங்கைச் சரித்திரத்திலேயே, இராணுவ எதிர்ப்பையும் விமானங்களின் குண்டுத்தாக்குதலையும் கப்பல் படைகளின் பீரங்கித்தாக்குதலையும் சமாளிக்க வேண்டிய துர்பாக்கிய நிலைக்குத்தமிழ் மக்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இலட்சக்கணக்கானோர் படகுகள் மூலமாக இந்தியாவில் தஞ்சமடையவும், உலக நாடுகளில் அடைக்கலம் கோரி நாடுகடக்கவும் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள் ஆயிக்கணக்கான தமிழ் இளைஞர்கள் காரணமின்றி கைது செய்யப் பட்டு காலவரையறையின்றி தடுப்புக் காவலில் வைக்கப் பட்டுள்ளார்கள். தமிழர்களின் கிராமங்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. விவசாயம் குன்றி விட்டது. தொழில் நசுக்கப்பட்டுள்ளது.

வீடுகள் எரிக்கப்பட்டுள்ளன. குடும்பங்கள் சிதைக்கப்பட்டுள்ளன குழந்தைகளும், பெண்களும்முதியோரும் கொலைக்கும் கொடுமைகளுக்கும் ஆளாக்கப் பட்டுள்ளனர். பட்டினி, மரணம், பயம் என்று தமிழினமே ஒரு மரணப் படுக்கையில் வீழ்த்தப்பட்டுள்ளது.

கொழும்பில் வாழும் தமிழர் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு வாழ்கிறார்கள் தமிழப் போராளிகள் தமது உயிரைப் பணயவைத்து இராணுவக் கொடுமைகளை எதிர்த்தும், எதிர் தாக்குதல்கள் நடத்தியும் வருகிறார்கள். இதற்கெல்லாம் பெயர் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் அல்லது ஈழப் போராட்டம்.

இப்படி ஒரு இனம் தனது தன்மானத்திற்காக மனித உரிமைகளுக்காக பயங்கரக் கொடுமைகளுக்குப் பலியாகி தீக்குளியல் நடத்திக் கொண்டிருக்கும் அதே வேளையில்,

தமிழ்மக்களின் பெயரால் தமிழ்மக்களின் விடுதலைக் காகப் போராடுகிறோம் என்று

## 'பிறைசூடி'

போர் முழக்கமிட்டுக் கொண்டு போராளிகளைப் போராளிகளே கொலை செய்வதும், தூற்றுவதும் தாக்குவதும் ஈழப் போராட்டத்தை எங்கு கொண்டு நிறுத்தியுள்ளது ?

ஈழத்தை ஆதரிகிறோம் என்று கூறு அரசியல் வாதிகள் ஈழப் போராளிகள் மத்தியிலேயே பிரிவினையை வளர்ப்பதும் விடுதலை இயக்கங்களைச் சாடுவதும், இது ஜனநாயகப் போராளிகளின் செயல், அது அராஜரீகப் போராளிகளின் செயல் என்று இனம் பிரித்து குஞ்சம் கட்டுவதும் எதனைக் காட்டுகிறது?

ஈழப் போராட்டம் தமிழ்மாநிலங்களில் இராணுவத்தைத் தாக்கி. போலீசைத் தாக்கி ஆரம்பித்து இன்று கொழும்பிலும் பிற சிங்களப் பகுதிகளிலும் குண்டு வைத்து பொருளாதார அடிப்படைகளைத் தகர்த்து சிங்கள மக்களின் குடியேற்றங்களை அழித்து, விமானங்கள், புகை வண்டிகளை, தொலைபேசிச் சாதனைகளைத் தகர்த்து ஒரு போர்க்கோலம் பூண்டிருப்பது எதனைக் காட்டுகிறது?

ஆரம்ப கட்டத்தில் கண்மூடித்தனமாக ஈழத்தமிழர்களை ஆதரித்த, தமிழக அரசியல் கட்சிகளுக்கும் இயக்கங்களுக்கும் இன்று சிலரைக் கண்டித்து சிலரைப் பாராட்டியும் அறிக்கைககள் விடுவதன் மர்மமென்ன? இன்று சில தமிழக சக்திகள் இந்த போராட்டக் கூர்மைகளை மழுங்க வைத்து, ஈழப் போராட்டத்திற்கான ஆதரவைத் திசை திருப்ப முனைவதன் மர்மமென்ன?

இலங்கையிலேயேயும், ஈழப் போராளிகளிடையிலேயும் இந்திய தலையீட்டைக் கண்டிக்கவும் கண்டலஞ்செய்யவும் சில சக்திகள் முதன்முறையாக முற்படுவதன் காரணமென்ன?

திடீரென்று தமிழகத்தில் உளவாளிகள் எனச் சிலர் கைது செய்யப்படுவது எதனை காட்டுகிறது?

தமிழ் ஈழ ஆதரவினர் எனக் கூறிக்கொள்வோரிடையேயும், ஒருவர் ஒருவர் துரோகிகள் என்றும், உளவாளிகள் என்றும் அர்ச்சனை செய்வதன் அர்த்தமென்ன?

பல காரணங்கள் இருக்கின்றன. ஒன்றே ஒன்று மட்டும் உண்மை. தமிழ் ஈழப் போராட்டத்தைத் திசை திருப்பும் முயற்சிகள் வெற்றிபெற்று வருகின்றன, இவை அபாய அறிகுறிகள் இவற்றை தமிழ் மக்கள் இனங்கண்டு கொள்ள வேண்டும்.

ஒரு கட்டத்தில் தமிழீழப் போராட்டத்தை சர்வ தேசமயப்படுத்தினால் அப்போராட்ட முயற்சிகள் வலுவடைந்தன இன்றைய கட்டத்தில் சர்வ தேச சக்திகள் போராட்டத்தை மழுங்க வைக்க முயற்சிக்கின்றன.

இன்று எந்த தேசியப் பிரச்சனையையும் தேசிய எல்லைக்குள்ளேயே வைத்துக்கொள்ள முடியாத ஒரு சர்வதேசச் சூழ்நிலையில் நாம் வாழ்கிறோம். நம்மை அறியாமலேயே நாம் சர்வதேசக் சக்திகளின் வலைகளுக்குள்ளே சிக்கிக் கொள்கிறோம்.

நாம் தான் இயங்குகிறோம் என்று நினைக்கிறோம்,

# நாடற்றவர்கள் எவ்வள[...]

**1964லில் தோராயமாக கணக்கிடப்பட்ட தொ[...]**

| இந்தியக் குடியுரிமை | | | இலங்[...] |
|---|---|---|---|
| | 1964—1974 | | ஒப்பந்தத்திலிருந்து[...] |
| கொடுக்கப்பட வேண்டியது | | கொடுத்தது | கொடுக்கப்பட வேண்டியது |
| 600,000 | | 421,207 | 375,000 |
| மீகுதி | 178,793 | (அ) | |
| | 1986 | ஜனவரி உடன்பாடு | |
| | 85,000 | [(அ)யிலிருந்து]? | |
| மீகுதி | 93,793 | (இ) | |

கொடுக்கப்படவேண்டிய (இ) + (ஈ) தொகை

1964-1985 இடையில் 30% இயற்கை அதிகரிப்பு

கணக்கில் எடுத்துக் கொள்ள வேண்டியதும், புதிய ஒப்பந்தத்[...]

இன்னும் கொடுக்க இருப்பது 85,000 + 94,000

ஆக இன்று இருக்கும் நாடற்றோர்

நன்[...]

ஆனால் நம்மை இயக்குவிப்பது இன்னொரு சக்தி. குடிபோதையில் ஒருவன் நடந்து கொள்வது போல, சர்வதேச அரசியல் சக்திகள் பலருக்கு பல்வேறு போதைகளை ஊட்டி விட்டு வேடிக்கை பார்த்துக் கொள்ளுகின்றன.

இலங்கையின் அரசியலில் இடது சாரி சக்திகள் வேகமாக முன்னேறி வந்தன. ஆனால் இனப் பிரச்சனை தலையெடுத்ததன் பின்னர், இடது சாரி அரசியல் இருந்த இடம் தெரியாமல் மறைந்து விட்டது. இன்றும் ஈழப்போராட்டம் மும்முரமடையுமானால், அதன் பிரதிபலிப்பாக சிங்கள மக்களிடையே முற்போக்கு சக்திகள் மும்முரமடையக் கூடிய சாத்தியக் கூறுகள் உள்ளன. இலங்கையை முதலாளித்துவக் காட்சிப் பொருளாக வைத்திருக்க விரும்பிய யாருக்கோ இது வயிற்றைக் கலக்குகிறது. ஆகவேதான் சர்வ தேச சதிக் கும்பல்கள் ஈழப் போராட்ட சக்திகளை ஊடுருவி அனர்த்தங்கள் விளைவித்துக் கொண்டு வருகின்றன தமிழ் மக்கள்கண் விழித்து அபாய அறிகுறிகளை புரிந்து கொள்ள வேண்டும். ஈழப் போராளிகள் நிதானம் பெற வேண்டும். நெறிகள் நிலை நாட்டப்பட வேண்டும்.

வு பேர் ?

கை 9,75,000

கைக் குடியுரிமை

கொடுத்தது
197,535
177,465 (ஆ)

94,000 ['ஆ)விலிருந்து]?
83,465 (ஈ)
177,258
325,000
தில் சேராததும் 502,258
179,000
681,298

றி: 'சிலோன் டுடே'

கர்னாடக

# பால்மரக் காட்டில்

(சென்ற இதழ் தொடர்ச்சி)

திருமண, சடங்கு, சம்பிரதாயங்களில் கூட நிலைமைகள் அவ்வாறே நிலவுகிறது - தென் கன்னட மாவட்டத்தில் நிலவும் பழக்கங்களை அப்படியே கைக்கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர்.

திருமணத்தில் மணமக்கள் அமர்ந்தவாறு தாலி கட்டுவதில்லை; நின்ற வண்ணம்-இருவரையும் இடுப்பை சுற்றி நூல் கட்டி இருக்க-தாலி அணிதல்:

நெற்றியிலும், முன் வகிட்டிலும் குங்குமம் இட்டுக் கொள்ளல்;

தாவணி அணிவதில்லை; பாவாடை, ரவிக்கை மட்டுமே அணிதல்;

மூக்குக் குத்திக் கொள்வதில்லை;

திருமணம் - சாவின் போது தப்பு அடிப்பதில்லை; திருமணத்தில் பேண்ட் வாத்தியம் பயன் படுத்தல்;

உள்ளூர் கடவுள் வழிப்பாடு;

ஒவ்வொரு வீட்டு முன்னும் துளசி செடி வைத்தல்;

-இப்படி உள்ளூர் மக்களின் கலாச்சார, பழக்க வழக்கங்கள் கடைப்பிடிக்கப்படுகிறது.

ஆயினும்கூட, இலங்கை மலை நாட்டில் நிலவிய அதே 'லயத்து' மனோபாவம் இருக்கிறது; சங்கங்கள் அமைத்தல், கட்சி கட்டல், பல தலைவர்களை உருவாக்குதல், கூட்டாக வாழும் வாழ்க்கை முறை அப்படியே உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## உள்ளூர் மக்களுடன் உறவுகள்

முதலில் தாயகம் திரும்பியோர்கள் இங்கு வந்த போது உள்ளூர் வாசிகள், இவர்களை இராவணனின் வாரிசுகள் என்று நெருங்கிப் பழகவேபயத்திருக்கிறார்கள்.

இலங்கையைப்பற்றி - இன்று அங்கு நிலவும் தமிழர்- சிங்களவர் இனப்பிரச்சனைகள் பற்றி எல்லாம் அவர்கள் அறிந்திருக்கவில்லை - இலங்கையைப் பற்றி எல்லாம் அவர்களுக்கு தெரிந்ததெல்லாம் அங்கு இராவணன் என்ற இராட்சசன் வாழ்ந்தான். அவன் சீதையை சிறையெடுத்தான் இராமன் படையெடுத்து அவர்களை வெற்றி கொண்டான் என்ற இராமாயண சமாசாரங்கள் தான்.

அதனால் இலங்கையி

**டீயெஸ்ஸார்**

லிருந்து வந்து இவர்கள் இராவணன் பரம்பரை, மனிதனைத் தின்பார்கள் என்று பயந்து பேசவே அச்சப்பட்டிருக்கிறார்கள்.

பிறகு போகப் போக உண்மைகளை புரிந்துக் கொண்டுப் பழக ஆரம்பித்திருக்கிறார்கள்.

வெளியுலக நாகரீகம் அதிகம் வீசாத-வெளியூர்களுக்கு கூட செல்லாத - ரயிலைப் பார்த்திராத - சுமார் 45 கிலோ மீட்டர் தூரத்தில்இருக்கும்கடலைக்கூட பார்த்திராத அளவிற்கு பெரும்பான்மையினராக வாழும் உள்ளூர் மக்கள் இனதுவேஷம் குறைந்தவர்களாக பழகுகிறார்கள்.

ஆரம்பத்தில் தாயகம் திரும்பும் பெரும்பான்மையோர் கருப்பாக இருப்பதால் இவர்கள் தாழ்ந்த சாதியினர் என்றே ஒதுங்கியிருக்கின்றனர். பின்னர் புரிந்து கொண்டு தம்மை திருத்திக் கொண்டனர்.

'சாமி சாமி' என்று எல்லோருடனும் இனிமையின -பேதமின்றி பழகுகிறார்கள். இன்னொரு தேசியம்- பகுதியிலிருந்து வந்தவர் என்பதால் தாயகம் திரும்பியோர் விஷயம் அறிந்தவர்கள் என்று நினைக்கிறார்கள் அந்தஉணர்வோடு இவர்களை 'வழிகாட்டுதலாக' கருதி பயன்படுத்தி கொண்டுள்ளனர்.

ஆயினும் - இன்று அரசியல் வாதிகளின் இனப்பிரச்சாரம் இவர்களை தமிழர்களாக, அன்னியர்களாக கருதும் நிலை-துவேஷம் காட்டும் நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது.

அது மட்டுமல்ல, வேலை வாய்ப்பு, உள்ளூர் வாசிகளை சிந்திக்கத் தூண்டியுள்ளது.

எந்த கூலிக்கும் தாயகம் திரும்பியோர் வேலைசெய்தல், இதனால் உரிய கூலி கிடைக்காது போகும் நிலையில் உள்ளூர் தொழிளாளர் பாதிப்பு, இவர்கள் வேலை செய்யும் தோட்டங்களில் வேலை கேட்கும் நிலை- இப்படிப்பட்ட பிரச்சனைகள் இவர்களுக்கிடையில் வேற்றுமைகளை தோற்றுவித்துள்ளது.

ஆரம்பத்தில் கன்னடர்கள் காடுகள் அழித்து ரப்பர் கன்றுகள் நட்டு வளர்த்த தோட்டங்கள் தான், தாயகம் திரும்பியோர்கள் குடியமர்த்தப்பட்ட தோட்டங்கள். குடியேற்றத்தின்போது எந்த எதிர்ப்பும் காட்ட வில்லை. விட்டுக் கொடுத்தார்கள். ஆனால் கேரளாவில் இதுபோன்ற சூழ்நிலையில் தாயகம் திரும்பியோர்களுக்காக கேரள தொழிலாளர்கள் விட்டுக் கொடுக்கவில்லை; தாங்கள் உருவாக்கிய தோட்டங்களில் தாங்களே வேலை செய்ய வேண்டுமென போராடியது குறிப்பிடத்தக்கது.

(7-ம் பக்கம் பார்க்க)

(சென்ற இதழ் தொடர்ச்சி)

அவர் சொன்னபடி இங்கே நிலமையும் இருக்கிறது. இவர்கள் இல்லாவிட்டால் எல்லாம் நல்லபடி நடக்கும்.

நான் கூட எங்கள் தலைவருக்கு பத்து கேஸ் போல பிடித்து கொடுத்திருக்கிறேன். அப்படியும் கூட என் கேஸ் இழுபறியில் தான் இருக்கிறது,

இன்றைக்கு எப்படியும் முடிந்து விடவேண்டும்.

ஆபீஸில் கிளார்க்மார்கள் எல்லாம் வந்து விட்டார்கள்.

அ க தி க ள் கலைக்டரும், டி-ஆர் ஓ. ஐயா அவர்களும் வந்து விட்டார்கள். நமது தலைவரைத்தான் இன்னும் கானவில்லை.

அடே அப்பா! அதற்குள்ளே மணி பன்னிரண்டுக்கு மேல் ஆகிவிட்டது.

எனக்கு வயிற்றை வேறு கிள்ளுகிற மாதிரி இருக்கிறது.

காலையிலே வெறும் வயிற்றோடு வந்தது. டீ கடைபக்கமாக போனேன். இரண்டு ஆமை வடையும் ஒரு டீயும் குடித்து விட்டு, ஆபீஸ் பக்கம் போனேன். ஆபீஸுக்கு முன்னால் எதோ சத்தமா இருந்தது....

ஓடிப்போய் பார்த்தால் ஒரு கழுதையை விரட்டிக் கொண்டு இருந்தார்கள், அதன் வாயிலே ஒரு கடுதாசி கத்தை; கவ்விக்கொண்டு இருந்தது.

''ஏய்!...புடி... புடி... ''

சத்தம் போட்டு அதை வலைத்தார்கள்.

அதுவோ ... அங்கேயும் இங்கேயும் ஓடி எல்லோரையும் அலைகழிக்க வைத்தது

எப்படியோ ஒரு வழியாக ஒருவர் அதன்வாயிலே இருந்த கடுதாசி கத்தையை பிடித்தி இழுத்து பறித்து எடுத்து விட்டார்.

அதில் கொஞ்சம் கிழிந்து அதன் வாயிலேயே போய் விட்டது. அதோடு அது ஓடிப் போய் விட்டது.

சிரிப்பாகக் கூட இருக்கிறது.

# சகுனம்

ஒரு கட்டு திட்டமே இல்லை இந்த ஊருலே எங்கே பார்த்தாலும், கழுதையும் பன்றியும் ஏராளமாக அலைகின்றன.

அங்கே எல்லாம் இவையெல்லாம் இல்லை.

பன்றிகளை இப்படி பார்க்க முடியாது. சில தோட்டங்களில் வெள்ளைக்காரத்துரைமார்கள் வளர்த்தார்கள். அதை இப்படியெல்லாம் விடமாட்டார்கள். அதுவும் வெள்ளைப் பன்றிகள். பட்டிஅடித்து வளர்த்தார்கள்.

இந்த கழுதைகள் இருக்கிறதே இது அங்கே இல்லை இதை பார்த்தது கூட இல்லை பள்ளிக் கூட புஸ்தகத்திலே பார்த்ததுதான். இந்தியா வந்த பிறகு தான் உயிரோடு பார்க்கிறோம்...

∴ ∴ ∴

தலைவர் எப்போது வந்தார்' ஆபீஸ் உள்ளே இருந்து வெளியே வந்தார்.

மெல்ல அவர் அருகே போனேன்

''கொஞ்சம் இருங்க உங்க வேலை ஆயிடும்'' என்றார்.

நான் பழையபடி புளிய மரத்தடிக்கே போனேன்.

'சீ காத்து காத்து உக்காந்து ஒரே அலுப்பா இருக்கு'

திங்கள் கிழமை வேறு.......... தலைவர்மார்கள் அங்கேயும் இங்கேயுமாக ஆபீஸுக்கும், டீ கடைக்கும் புளிய மரத்தடிக்குமாக ஆள்களோடுஆபீஸிலே வேலை பார்க்கிறவர்களோடு பறந்து கொண்டு இருந்தார்கள்

நமது தலைவருக்கு எல்லாம் அத்துப்படிதான் ஆபீஸிலே அத்தனைப் பேரையும் கைக்குள்ளே போட்டு வைத்திருக்கிறார்.

அவர் மூலமாக மனுப்போட்டவர்களெல்லாம் வந்து போய் விட்டார்கள்.

என் விசயம் இன்னும் முடிந்த பாடில்லை.... மறந்து விட்டாரோ ?

பொழுது வேறே சாய்கிறது. கடைசி பஸ்ஸும் ஏழரை மணிக்கு. அதையும் விட்டு விட்டால் ஒன்றும் பண்ண முடியாது.

மெல்ல ஆபீஸ் பக்கம் போய் நின்றேன். தலைவரும் அங்கே இருந்தார்.

''என்னையா இந்த மேசை மேலே தானே அது இருந்தது அதுக்குள்ளே அது எங்கையா போகும் ?'' என்று எட்கிளாக்கர் ஐயா என்னவோ திட்டிக் கொண்டிருந்தார்.

மேசைகளெல்லாம் கடுதாசி கட்டா நிறைந்துக் கிடந்தது. எதிலே இருக்கிறதோ ?

**'தேனூரன்'**

எட்கிளார்க்கையா ரொம்ப கோபமாக இருந்தார்.

அப்படியும் இப்படியும்பார்த்துக் கொண்டே வந்தார்-

''அந்த கட்டுக்கு மேலே இருக்கிற பைல் என்னா?'' என்று ஒரு இடத்தை காட்டினார்.

பியூன் எடுத்துக் கொடுத்தார்

''இது என்னா இப்படி இருக்கு'' என்று திருப்பித் திருப்பிப்பார்த்தார்.

''கழுதை இழுத்துக்கிட்டு போனது''என்று பியூன் இழுத்தார்.

''இதோ? இது எப்படியா இங்க இருந்து அங்க போனது'' என்று அதட்டி விட்டுச் சொன்னார், -''இந்த ஆபீஸிலே இதே எழவா போயிடுச்சு எதுவும் ஒழுங்கா இருக்கிறதில்லே'' என்று.

எட்கிளார்க்கர் ஐயா பைலை புரட்டிப்புரட்டிப் பார்த்தார்.

பிறகு தலைவரிடம் கொடுத்தார்.

''என்ன சார் இப்படி இருக்கிது ?'' என்று தலைவர் இழுத்தார்.

''புதுசா ஒரு பைல் ஒப்பன் பண்ணணும்'' என்று கிளார்கர்ஐயா சொன்னார்.

கால்வாசியை அந்த கழுதை தான் தின்றுவிட்டதே

''என்ன ஸார் ரொம்ப நான் ஆயிட்டுது பாவம் இந்த மனுதாரர் ரொம்பகஷ்டப்படுகிறார்' என்று தலைவர் சொன்னார்

''நான் என்னப்பாசெய்யறது உடனே எப்படி போடறது ஒரு வாரத்துலே போட்டு கொடுத்துடலாம்'' என்று அவர் பதில் சொன்னார்.

தலைவர் கொஞ்ச நேரம் யோசித்துக் கொண்டு இருந்து விட்டு வெளியே வந்தார்.

''என்னங்க அது உங்க பையில்தான் எல்லாம் முடிஞ்சி இன்றைக்கு கொடுக்குறத்துக்கு தயாராக இருந்தது. அதுக்குள்ள கழுத...'' என்று இழுத்தார்.

எனக்கு வயிறே கலக்கி விட்டது-

ஐயோ! இன்றைக்கு கிடைக்கும் என்று இருந்தேன். என்றைக்கு இந்த லோனை வாங்கிறது. கேணியை வெட்டுகிறது. வெள்ளம பண்ணுறது ? அதற்குள்ளே குழந்தை குட்டியெல்லாம் பிச்சை எடுக்க வந்து விடும் போல இருக்கிறது

ஒன்றுமே தோன்றவில்லை.

வந்த யோகம் கழுதை வாயுக்கு போனது....

∴

## கர்னாடக....

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆயினும் இன்று அரசியல் சமூக பொருளாதார சூழ்நிலைகள் தாயகம் திரும்பியோர்-உள்ளூர் மக்கள் மத்தியில் விரிசல் தோற்ற ஆரம்பித்திருக்கிறது.

## எதிர்காலம்...?

தங்களுடைய எதிர்காலம் எப்படி இருக்கும் என இன்றைக்கோ அவர்கள் கேட்கும் நிலையிலும் இருக்கிறார்கள்.

இதன் நிர்வாகம் சரிஇல்லை. ரப்பர் தோட்டங்கள் திட்டமிட்டப்படி நடத்தப்படவில்லை. அதன் உற்பத்தி- மரம் நடப்படும் பரப்பளவு அதிகரிக்கப்படவில்லை, அக்கறை இன்மையாக இருக்கிறார்கள்-ரப்பர் நடுகைக்குப் பதில் மர முந்திரி நடுகிறார்கள். இதன் மூலம் தொழிளாளருக்கு சரியான வேலை கிடைக்காது.

மக்கள் உற்பத்திக்கு தகுந்த மாதிரி ரப்பர் தோட்டம் வளர்ச்சி பெறவில்லை. தொடர்ந்து இத்தோட்டங்கள் இருக்குமா என்ற ஐயம் உண்டு இதன் மூலம் வேலை இல்லாத பிரச்சனை தலை தூக்கும்.

படித்தவர்களுக்கு சலுகை இல்லை தகுதிக்கேற்ற வேலையில்லை. தோட்ட நிர்வாகத்தில் தாயகம் திரும்பியோர் பிள்ளைகளுக்கு வேலை மறுக்கப்படுகிறது.

கேஷுவலாக ஒரு குடும்பத்திலுள்ள ஒருவருக்கு மேல் வேலை கொடுத்தாலும், அது வாய் இருப்பவருக்கு — சக்தி இருப்பவர்களுக்கே நடைபெறுகிறது.

இனரீதியாப் பார்க்கும்போது மெல்ல இனத்துவேஷம் முகம் காட்டவும் ஆரம்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இன்றைய அரசியல் போக்கு அரசியல்வாதிகளில் பிரச்சாரம் தாயகம் திரும்பியோருக்கு-உள்ளூர் மக்களுக்கு முள்ள சௌஜன்யத்தை சிதைக்க முற்பட்டிருக்கிறது. தோட்டங்களில் உள்ளூர் வாசிக்கு வேலை என்று அரசியல் வாதிகள் தூண்டுதல், கூலி வித்தியாசம் போன்ற வேற்றுமைகள் வளரவும் தொடங்கி விட்டன. தாயகம் திரும்பியோர்கள் அனைவருமே தொழிளாளர்கள். சொத்துக்கள் எதுவும் இல்லாதவர்கள் வேலை தான் ஜீவாதாரம். இந்நிலையில் கன்னடம் தெரிந்தால் தான்; வேலை இல்லா விட்டால் எதுவும் கிடைக்காது என்ற நிலையும் இருக்கிறது.

## மனோநிலை

மறுவாழ்வு மூலம் இந்தியாவில் ஒரு மாநிலத்தில் இவர்கள் குடியமர்த்தப்பட்டாலும் அன்னியமான உணர்வு இவர்கள் மத்தியில் மேலோங்கி இருக்கிறது.

பலர் இந்த வாழ்விலிருந்து மீண்டும் தமது வாழ்வை தமிழ் நாட்டுடனே இணைத்துக் கொள்ள விரும்புகின்றனர்.

சொந்த நிலம் வாங்கி விவசாயம் செய்கிறவர் கூட இது ஒரு தற்காலிக வாழ்வாகவே கருதுகிறார்கள்.

இலங்கையில் அன்னியராகக் கருதப்பட்டு விரட்டப்பட்டோம். இங்கு வந்தும் தமிழர் அல்லாத பகுதியில் அன்னியராகவே வாழ்கிறோமே என்று சலிப்பும் அடைகிறார்கள்.

(இத்துடன் முடிவடைகிறது)

---

தவிர்க்க முடியாத காரணங்களால் இந்த இதழ் எட்டு பக்கங்களாக மட்டுமே வெளி வருகிறது. அடுத்த இதழ் வழக்கம் போல வெளிவரும்.

—ஆசிரியர்

Editor & Publisher: T. S. RAJU, 1, South Gangai amman koil 2nd Street, Madras-600094. Printed: L. S. Srinivasan at Jai Kalidas Press, 29, B. E. Colony, 4th Street, Madras-24.

## மக்கள் மறுவாழ்வு சேவைப்பகுதி

∴ நீங்கள் தமிழ் எழுத மட்டும் தெரிந்திருந்தால் பட்டப் படிப்பு பயிலலாம். இதற்கு மதுரை காமராஜர் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து அஞ்சல் வழி மூலம் பயிலலாம்,

∴ மேல்நிலை கல்வி அல்லது அதற்கு நிகரான கல்வி கற்றவர்கள் சில தொழில்களில் பயிற்சி பெற்று 'டிப்ளோமா' சான்றிதழ் பெறலாம்,

∴ கல்வி கற்பதற்கான உதவி தொகை பெறலாம்.

∴ கனரக போக்குவரத்து ஊர்தி ஓட்டுநர் பயிற்சி பெறலாம். கும்மிடிப்பூண்டியிலுள்ள சாலைப் போக்குவரத்து கழகத்தில் சேர்ந்து பயிற்சி பெறலாம்.

—இது போன்ற பல பட்ட பட்டப்படிப்பு, தொழிற்பயிற்சிகளில் தாயகம் திரும்பிய நீங்கள் சேரலாம்.

உங்கள் படிப்பு, தகுதி, வயதுக்கு தகுந்தபடி ஏதேனும் ஒன்றை தெரிவு செய்யலாம்.

இதுபோன்ற விபரங்களை விளக்கங்களையும் பெற கடந்த மாத தினமணி, இந்தியன் எக்ஸ்பிரஸ் போன்ற தமிழ் ஆங்கில தினசரிகளைப் புரட்டினால் தேவையான தகவல்கள் கிடைக்கும். உடனடியாக.......

## விவசாயிகள்...

(முதல் பக்கத் தொடர்ச்சி)

குமார் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளார்-

மேலும், குர்னிகால் சிங் பிரசாதா என்னும் நல்ல ஒரு அதிகாரி கொடைக்கானலில் துணை ஆட்சியாளராக பொறுப் பேற்ற 6 மாத காலத்திற்குள் மக்கள் குரலுக்கு செவி சாய்த்து குறைகளுள்ள இடங்களுக்கெல்லாம் இரவு பகல் சிரமம் பாராது நேரில் சென்று பார்வையிட்டு, தன் சக்திக்கேற்ப நடவடிக்கை எடுத்தார். கொடைக்கானல் காட்டுப் பகுதியில் மக்கள் பிரச்சனைகள் ஆண்டாண்டு காலமாய் கவனிக்கப்படாமல் இருப்பது எல்லோரும் அறிந்ததே. குடி தண்ணீர் முதல் நடைபாதை வரை எல்லா பிரச்சனைகளும் எந்த அதிகாரியாலும் இது வரை கண்டுக்கொள்ளப்படவே இல்லை.

பணக்காரர்களின் கைகளில் சிக்குண்டு, கொத்தடிமைகளாக நடத்தப்பட்ட மக்களை மனிதராக வாழ வைக்க நினைத்து விடுதலை செய்ய நடவடிக்கை எடுத்தார். பணக்காரர்களும், அவர்களது கைக் கூலிகளுமான அரசியல் வாதிகளும் லஞ்சத்திலேயே ஊறிப் போன அதிகாரிகளும் இவர் மக்கள் தொண்டனாய் இடுப்பது பிடிக்காத காரணத்தாலும் இவரது மனிதாபிமான நடவடிக்கையால் தங்கள் வயிற்றில் அடிபடுகின்றதே என்றும் குறுகிய நோக்கத்தில் அவருக்கு கொடுத்திருக்கும் தண்டனை இடமாற்றம்என்று அவ்வறிக்கையில் கூறியுள்ளார். O

## வாழ்த்துகிறோம்

சென்னை, அம்பத்தூர் பீ. எஃப், செக்யூரிட்டி ஃபோர்ஸ் உரிமையாளர் திரு பிரான்சீஸ் அந்தோணிசாமி அவர்களுக்கும், திருச்சி மாவட்ட புள்ளம்பாடி கோவண்டா குறிச்சி (லேட்) அந்தோனிசாமி அவர்களின் புதல்வி சகாயமேரிக்கும் 11.6.86 அன்று இனிதே திருமணம் நடைபெற்றது. மணமக்களுக்கு நல்வாழ்த்துகள். [ஆ-ர்

Regd. No. R. N. 42556/83 Regd No. TN/MS (C) 702 MAKKAL MARUVAZHVOO

தாயகம் திரும்பியோரின்
வழிகாட்டி

மக்கள் மறுவாழ்வு

தொடர்ப்பு முகவரி :
அஞ்சல் பை எண். 5560
சென்னை-600094

# தாயகம் திரும்ப இருப்போரை கவனத்தில் கொண்டு திரும்பியோர் பிரச்சனைகளை கவனியாதிருப்பதா?

தாயகம் திரும்ப இருப்போரைப்பற்றி திட்டம் போடுவதை விட்டு, திரும்பியோர்களில் வாழ்வுக்கு உதவ மறுவாழ்வுத் துறை முயல வேண்டும்.

தாயகம் திரும்புகிறவர்களுக்கு உடனடியாக நிவாரணம் - மறுவாழ்வு உதவிகளை அளிக்க மறுவாழ்வு துறை இருக்கிறது. ஆனால் 1984 அக்டோபர் 22ந் தேதியுடன் இராமேஸ்வர - தலைமன்னார் படகு சேவை நிறுத்தப்பட்டு விட்டதால் இலங்கையில் தாயகம் திரும்புவோர் வருவது நின்று போனது, இலங்கைத் தமிழர் பிரச்சனை தீர்ந்து இலங்கையில் ஒரு சுமூகமான சூழ்நிலை ஏற்பட்ட பிறகு தான் தாயகம் திரும்ப இருப்பவர்கள் இந்நாட்டுக்கு திரும்புவார்கள்.

இந்நிலையில் இந்த இடைக் காலத்தில் ஏற்கனவே வந்து வாழ்கிற தாயகம் திரும்பியோர்கள் பிரச்சனைகளை தீர்க்கவும் இதுவரை மறுவாழ்வு உதவிகள் பெறாதவர்கள் உடன் உதவி பெறவும் மறுவாழ்வு துறை முன் வர வேண்டும்.

தாயகம் திரும்பி பல வருடங்கள் ஆகியும் பலர் இன்னும் முதல் கடனுதவியே வாங்காதிருக்கிறார்கள். பலர் இரண்டாவது கடன் வாங்க முடியாது இருக்கிறார்கள். ஏராளமான பேர் வீட்டு மனையில்லாததால்-அதை தேடிப் பிடித்து வாங்கும் சக்தியில்லாததால் வீட்டுக் கடன் பெற்று வீடு கட்ட முடியாது திண்டாடுகிறார்கள்.

தாயகம் திரும்பியோர் கூட்டுறவு வங்கி மூலம் சின்னஞ்சிறு தொழில் நிறுவனங்களில் வேலை பெற்றவர்கள் பல்வேறுபட்ட காரணங்களால் வேலை இழந்து எதுவும் பெற முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

பிற மாநிலங்களுக்கு வேலை வாய்ப்பு பெற்ற பலரும் பல பிரச்சனைகளால் தமிழ்நாடு திரும்பி வேலை இன்றி துன்பப்படுகிறார்கள்.

கல்வி உதவி-மற்றும் சலுகைகள் எதுவுமே திருப்தி கரமாக கிடைப்பதில்லை. பல உதவிகள், முன்னுரிமைகள் எல்லாம் குறைந்துப் போய் விட்டன.

இவர்கள் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு அலுவலகங்களோடு தொடர்பு கொள்ளும் போது இவர்கள் பிரச்சனைகளை பிரச்சனைகளாக எடுத்துக் கொள்ளப்படுவதில்லை; மனிதாபத்தோடு கவனிக்கப்படுவதில்லை,

இவர்கள் கோரிக்கைக்கு— பிரச்சனைக்கு எந்த பதிலும் திருப்திகரமாக கிடைப்பதில்லை. கீறல்விழுந்த இடைத் தட்டுப் போல ஒரே மாதிரியான பதிலே அளிக்கப்படுகிறது.

தாயகம் திரும்பியோர் முகம் கொடுக்கும் எந்த பிரச்சனையாக இருந்தாலும் இது குறித்து இதுவரை எந்த பரிசீலனைகளும் செய்யப்பட்டு மாற்றுத் தட்டங்களோ - பரிகாரங்களோ வழங்கப்பட்டதில்லை.

மொத்தத்தில் யாருக்கும் எதுவும் செய்ததாக இல்லை என்றே சொல்ல வேண்டும்.

தாயகம் திரும்புவோருக்கு வேலை வாய்ப்பு அளிப்பதற்காக மத்திய அரசு பலவேறுபட்ட தொழில் நிறுவனங்களுக்கு கடனுதவி அளித்துள்ளது. ஆயினும் தாயகம் திரும்புவோர் வராதிருப்பதால் இந்த வேலை இடங்கள் நிரப்பப்படவில்லை தாயகம் திரும்புவோர் வருகையில்லாததால் - வேலைக்கு போட முடியாது இருப்பதால் பெற்ற கடனை ஒப்படைத்து விடவும் வேறு ஆட்களை போட்டுக் கொள்ளவும் உத்தேசிப்பதாக சில நம்பமான தகவல்கள்.

கூட்டுறவு நூற்பாலை போன்றவற்றில் கூட தாயகம் திரும்பியோர்களுக்கு வேலை வாய்ப்பு இருப்பதாக அறியப்படுகிறது.

மத்திய அரசும் தாயகம் திரும்பியோர் மறுவாழ்வுக்காக நிதி அளிக்க தவறவில்லை.

ஆயினும் தாயகம் திரும்ப இருப்போர்களையே கருத்தில் கொண்டிருக்கிறார்கள். உரிய காலத்தில் உரிய முறையில் - உரிய உதவிகள் பெறாது இருக்கும் தாயகம் திரும்பியோர்கள் குறித்து அரசும் - சம்பந்தப்பட்ட துறையும் -சம்பந்தப்பட்ட மறுவாழ்வு அலுவலகங்களிலுள்ள அதிகாரிகளும் அக்கறை காட்டுவதாக இல்லை.

தாயகம் திரும்ப இருப்பவர்கள் எப்போது வருவார்கள் என்று சொல்ல முடியாது இலங்கைத் தமிழர் பிரச்சனை எப்போது தீரும் என்றும் தெரியாது.

எனவே, அவர்கள் வருவதற்கிடையில் - தாயகம் திரும்பி விட்டவர்கள் பிரச்சனைகள் குறித்து ஆராய வேண்டும்

காலம் கடந்ததால் -பல காரணங்களால் -உதவிகள் இழந்து, வேலை இழந்து நாடோடிகள் போல-நடைப்பிணங்கள் போலவும் வாழ்க்கையில் - பொருளாதாரத்தில் நலியுற்று வாழும் தாயகம் திரும்பிய மக்களின் பிரச்சனைகள் குறித்து பரிசீலிப்பதோடு அவர்கள் தங்களுக்குரிய உதவிகளை - இழந்த வேலைகளை மீண்டும் பெற மாற்றுத் திட்டம் அமைக்க வேண்டும். மறு சந்தர்ப்பம் தர வேண்டும்.

மனிதாபத்துடன், இவர்களுக்கு மறுவாழ்வு பெற்று வாழ்வில் தேட்டமுற சம்பந்தப்பட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் O